**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 373/2023</u>**

**<u>வழக்கு சாட்சி PW–1</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரியப்பன் | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | மாடசாமி | தொழில் | : | சாமில் |
| கிராமம் | : | இலஞ்சி | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 15th, 2025.

**(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் இலஞ்சியில் குடியிருந்து வருகிறேன். நான் சாமில்லில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரி அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். 28.12.2022 ம் தேதி, இலஞ்சி சவுக்கு முக்கு ரோட்டில் உள்ள புரோட்டா கடையில் இரவு 08.45 மணியளவில் சாப்பிட்டு கொண்டிருந்தேன். அப்போது, எதிரி கடைக்கு வந்தார். என்னை முறைத்து பார்த்துக்கொண்டிருந்தார். நான் அதை பொருட்படுத்தாமல் சாப்பிட்டு கொண்டிருந்தேன். எதிரி கையில் வைத்திருந்த கத்தியால் எனது முதுகில் குத்தினார். மீண்டும் மார்பில் குத்தினார். மீண்டும் குத்தும்போது, நான் தடுத்ததில் வலது கை பெருவிரலில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. பின்பு எதிரி என்னை தேவடியா மவனே, புண்டா மவனே என்று கெட்ட வார்த்தைகளால் பேசினார். எதிரி என்னிடம் என் அம்மாவை மன்னிப்பு கேட்க வைத்தாய் அல்லவா, உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என்று மிரட்டினார். இந்த சம்பவத்திற்கு 4 மாதங்களுக்கு முன்பு ஒருநாள் வீட்டின் முன்பு நான் நிறுத்தியிருந்த எனக்கு சொந்தமான

இருசக்கரவாகனத்தை கீழே தள்ளி விட்டார். எதிரியிடம் அது குறித்து கேட்டதற்கு பதில் சொல்லவில்லை. எதிரியின் அம்மாவிடம் இது குறித்து சொன்னேன். அவர் தனது மகனை கண்டிப்பதாக சொன்னார். இந்த முன்விரோதத்தினை மனதில் கொண்டு, எதிரி என்னை தாக்கினார். இந்த சம்பவம் புரோட்டா கடை உரிமையாளர், சப்ளையர் ஆகியோர்களுக்கு தெரியும். எதிரி என்னை தாக்கியபோது, அருகில் இருந்தவர்கள் அவரை சத்தம் போட்டார்கள். எதிரி போகும் போது, என்னைக்கிருந்தாலும், உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என்று மிரட்டி விட்டு சென்றார். காயம்பட்ட நான் சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். சிகிச்சையில் இருந்தபோது, போலீசார் வந்த விசாரிக்க நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தேன். எனது வலது கை பெருவிரலில் வெட்டுக்காயம் இருந்ததினால் என்னால் கையெழுத்து போட முடியவில்லை. அதனால் இடது கை பெருவிரல் ரேகை வைத்து கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் இது தான். அது **அ.சா.ஆ.1** ஆகும். அந்த புகார் வாக்குமூலத்தில் எனது நண்பர் பாலகிருஷ்ணன் சாட்சியாக கையெழுத்து போட்டு கொடுத்துள்ளார். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

(சான்று பொருட்கள் செங்கோட்டை நீதிமன்றத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு வராத காரணத்தினால் அவைகளை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.16 17:52:19 +0530